**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S.No.115/2024**

**2025ம் வருடம் அக்டோபர் மாதம் 27ம் நாள் திங்கட்கிழமை**

வா.சா.2 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன் படி இளநிலை உதவியாளர் திரு.ராமகிருஷ்ணன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்பிரமணி | த/பெ | அய்யனார் |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:-**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை :**

எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி கேட்டதன் பேரில் சாட்சி சொல்ல வந்தேன். வாதி லிங்கத்திற்கும் 1ம் பிரதிவாதி லிங்கத்திற்கும் இடையே என்ன வழக்கு நடக்கிறது என்று எனக்கு தெரியும். வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையேயான பெயர் ஒற்றுமையால் 3 இலக்க சொத்திற்கு இந்த வழக்கு நடக்கிறது. பத்திரப்பதிவில் தான் பெயர் ஒற்றுமை உள்ளது. எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் வாதி சொல்லி தான் எனக்கு தெரியும். 3 இலக்க சொத்துக்கள் ராமசாமி அய்யங்கார் மற்றும் சீனிவாச அய்யங்கார்

ஆகியோரிடமிருந்து வாதியின் தாத்தா வன்னித்தேவர் கிரையம் பெற்றார். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள்.10/3, 10/4, 10/5, 277/6, 287/2 ஆகும். தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் ஆவண எண் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாததால் இந்த வழக்கு பற்றிய விபரமும் எனக்கு தெரியாது என்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
மானாமதுரை.